# இயேசு ஒரு மனிதனை சொஸ்தமாக்கி அதை வீட்டாருக்கு சொல்லும்படியாக அனுப்பி வைத்தார்.

**ஜெபம்:** "எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் உம்மைப்பற்றி பிறருக்குக் கூற குழந்தைகளுக்கும் அவர்களது ஆசிரியர்களுக்கும் உதவுவீராக!"

குழந்தைகளின் வயதுக்கும் தற்போதையத் தேவைகளுக்கும் பொருத்தமான செயல்பாடுகளைத் **தெரிந்து கொள்க.**

பிசாசுகள் அலைக்கழித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனைப் பற்றிய கதையை **லூக்கா 8:26-39ல்** இருந்து ஒரு பெரிய குழந்தையோ அல்லது ஆசிரியரோ கூறலாம். அல்லது வாசிக்கலாம். இயேசு எவ்வாறு அவனைக் குணப்படுத்தி, தன்னுடைய குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் தேவன் செய்ததை அறிவிக்குமாறு வீட்டிற்கு அனுப்பி வைத்தார் என்பது பற்றி கூறுகிறது.



கதையைக் கூறிய பின் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்கவும். *(ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும் பதில் தரப்பட்டு உள்ளது).*

- பிசாசு பிடித்திருந்த மனிதன் இயேசுவைக் கண்டவுடன் என்ன செய்தான்? *(28)*
- அந்த மனிதன் தன் பெயரை ஏன் லேகியோன் என்று கூறினான்? *(30)*
- அந்த மனிதனை விட்டு விலகியபின் பேய்கள் எங்கு சென்றன? *(33)*
- பன்றிகளுக்கு என்ன நேர்ந்தது? *(33)*
- பிசாசுகளிடம் இருந்து தாம் விடுவித்த மனிதனை இயேசு எங்கு அனுப்பினார்? *(39)*
- விடுவிக்கப்பட்ட மனிதன் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கூறினார்? *(39)*

**முக்கியமான குறிப்பு:** இயேசு உங்களுக்கு என்ன செய்தார் என்று கூறுவதே பிறருக்கு தேவனைப் பற்றி கூறும் எளிய சிறந்த வழியாகும். ஒரு விலை உயர்ந்த முத்தை கண்டுபிடித்தல் போன்ற நல்ல செய்தியை எப்படி கூறுவீர்களோ அது போன்றே இதையும் கூற வேண்டும்.



பிசாசு பிடித்த மனிதனை விடுதலை ஆக்கி இயேசு வீட்டுக்கு அனுப்பிய கதையின் பகுதிகளை **நாடகமாக்கவும்.**

- சபைத் தலைவரோடு பேசி பிள்ளைகள் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும். எல்லா பகுதிகளையும் உபயோகிக்க வேண்டியது இல்லை.
- உங்கள் நேரத்தை ஒதுக்கி பிள்ளைகள் நாடகத்தை ஆயத்தம் செய்ய உதவவும். **பெரிய பிள்ளைகள்** சிறியவர்களுக்கு உதவட்டும்.
- குணப்பட்ட மனிதன், மனைவி, கதை கூறுபவர் பகுதிகளை **பெரிய பிள்ளைகளோ** பெரியவர்களோ ஏற்கட்டும்.
- எல்லா வேடங்களையும் ஏற்க போதுமான பிள்ளைகள் இல்லாவிட்டால் அயல் வீட்டு பிள்ளைகளை உதவி செய்யுமாறு அழைக்கலாம். அல்லது கதை கூறுபவர் பாத்திரத்தைப் பற்றி கூறி அவர் பேச வேண்டியதை வாசிக்கட்டும்.
- குடும்பத்தார் மற்றும் நண்பர்களின் வேடத்தை **சிறிய பிள்ளைகள்** நடிக்கட்டும்.

**கதை கூறுபவர்:** லூக்கா 8:26-31 ஐ வாசிக்கவும் அல்லது கூறவும். பின் கூற வேண்டியது, "விடுதலை அடைந்த மனிதன் கூறுவதைக் கேளுங்கள்!"

**குணமான மனிதன்:** "என் அருமையான குடும்பத்தாரே! நண்பர்களே! நசரேயனாகிய இயேசு எனக்கு செய்த மாபெரும் காரியங்களைப் பற்றி கூற நான் வந்திருக்கிறேன்.!"

**குடும்பத்தாரும் நண்பர்களும்:** ஓடிச்சென்று அந்த மனிதனை சுற்றி நின்று இவ்விதமாகப் பேசுகின்றனர். "பாருங்கள்! அவர் நல்ல மனநிலையோடு இருக்கிறார்!" "ஆடை கூட சரியாக அணிந்திருக்கிறார்!" "நல்ல அறிவோடு பேசுகிறார்." "யார் இதைச் செய்தது?"

**மனைவி :** "நீங்கள் பைத்தியமாய் இருந்தீர்கள்! கல்லறைகளில் படுத்துத் தூங்கினீர்கள்! உங்களையே காயப்படுத்திக் கொண்டீர்கள்!"

**குடும்பத்தாரும் நண்பர்களும்:** இவ்வாறாகப் பல கூறுகின்றனர். 'அப்பா! என்ன நடந்தது?' "பல பிசாசுகள் உங்களுக்குள் இருந்ததால் லேகியோன் என்று அழைக்கப்பட்டீர்கள்!"

"உங்களைப் பார்க்வே முடியாதோ என்று கூட நாங்கள் நினைத்தோம்.!"

"நீங்கள் இல்லாதது பெரிய குறையாக இருந்தது!"

**குணமான மனிதன்:** "நசரேயனாகிய இயேசு வந்து பிசாசுகளைத் துரத்திவிட்டார். அவைகள் ஒரு பன்றிக்கூட்டத்துக்குள் போயின. பன்றிகள் மலை உச்சியில் இருந்து கடலுக்குள் குதித்து விட்டன."

**மனைவி :** "நான் போய் இயேசுவைப் பார்க்க விரும்புகிறேன்."

**குணமான மனிதன்:** "அவர் எனக்கு அற்புதமான காரியத்தைச் செய்தார். நான் அவரோடு போக விரும்பினேன். ஆனால் அவரோ என்னை வீட்டிற்கு அனுப்பி அவரைப் பற்றி உங்களுக்குக் கூறும்படி கூறினார். அவர் உங்களையும் நேசிக்கிறார்."

**கதை கூறுபவர்:** உதவிய யாவருக்கும் நன்றி கூறல்.

**கேள்விகள்:** இந்த நாடகத்தைப் பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், அவர்கள் மேலே உள்ள கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும்.

நாம் பிறருக்கு கூறும்படியாக இயேசு நமக்கு செய்த பிற உதாரணங்களைக் கூறும்படி பிள்ளைகளிடம் கேட்கவும்.

ஒருவர் செய்தித்தாளைப் படித்துக் கொண்டு இருப்பது போன்ற ஒரு எளிய படத்தை வரைக. பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும்.



- அவர்கள் அடுத்த ஆராதனை வேளையின் போது படத்தைப் பெரியவர்களுக்குக் காட்டவும்.
- பிசாசுகள் மற்றும் மரணம் உட்பட சாத்தானின் சகல சக்திகளையும் இயேசு வென்று அடக்கினார் என்று நாம் கூற வேண்டிய நற்செய்தியை இது சித்தரிக்கிறது என்று விளக்கம் அளிக்கவும்.

**மனப்பாடம்:** ரோமர் 5:8.

**சங்கீதம்:** 8:1-5 ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

இயேசுவின் இரட்சிப்பைக் குறித்து நமது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் கூறுவது பற்றி பெரிய பிள்ளைகள் கவிதை பாடல் அல்லது நாடகம் எழுதலாம்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே! நீர் எங்களை நேசிப்பதற்காகவும், தீமையில் இருந்தும் மரணத்தில் இருந்தும் இரட்சிப்பதற்காகவும் நாங்கள் உம்மைத் துதிக்கிறோம். இதை நாங்கள் மற்ற சிறுவர்களுக்கு தெளிவாகப் புரியும் வகையில் கூற எங்களுக்கு உதவி செய்யும்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net